தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பங்குனி 28, திருவள்ளுவர் ஆண்டு—2053

2022 ஏப்ரல் 11, திங்கட்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. மு. அப்பாவு** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்
கெழுமையும் ஏமாப் புடைத்து."

ஒரு தலைமுறையில் பெறும் கல்வி அறிவானது, ஏழேழு தலைமுறைக்கும் பாதுகாப்பாக அமையும்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள். வினா வரிசை எண் 84, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐட்ரீம் இரா. மூர்த்தி, மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

84—

பன்னடுக்கு வாகன நிறுத்துமிடம்

***900—திரு. ஐட்ரீம் இரா. மூர்த்தி:**

மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராயபுரம் தொகுதி, எம்.சி. சாலைப் பகுதியில் பன்னடுக்கு வாகன நிறுத்துமிடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[*2022 ஏப்ரல் 11*

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) பெருநகர சென்னை மாநகராட்சி, இராயபுரம் தொகுதி, எம்.சி. சாலைப் பகுதியில் மனை இல்லாத காரணத்தினால், தற்போது அடுக்குமாடி வசதியுள்ள வாகன நிறுத்துமிட வளாகத்தினை அமைக்க இயலாத நிலை உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐட்ரீம் இரா. மூர்த்தி அவர்கள்.*

திரு. ஐட்ரீம் இரா. மூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராயபுரம் சட்டமன்றத் தொகுதியிலுள்ள எம். சி. ரோடு மற்றும் இதனைச் சுற்றியுள்ள அனைத்து தெருக்களும் தமிழகத்தில் மட்டுமல்லாது, இந்திய அளவில் மிகவும் புகழ்மிக்க ஜவுளி வியாபாரம் நடைபெறும் பகுதியாக உள்ளன. மேலும், ஆயத்த ஆடைகள் உற்பத்தி செய்து வணிகம் செய்திடும் இடமாகவும் உள்ளது. இங்கு நாள்தோறும் சென்னைவாசிகள், தமிழகத்தின் பிற மாவட்டங்களில் வசிப்பவர்கள் என அதிகமான வாடிக்கையாளர்கள் வந்து செல்கின்றனர். இதுமட்டுமல்லாது பிற மாநிலங்களிலிருந்தும் வியாபாரிகள் வந்து செல்கின்றனர். ஆக, தினந்தோறும் ஒரு இலட்சம் பேருக்குமேல் வந்து செல்லக்கூடிய இடமாக இந்த இடம் அமைந்துள்ளது. பண்டிகை நாட்களில் இந்தத் தெருக்களில் நடப்பதற்குக்கூட இடம் இல்லாத நிலை ஏற்படுகிறது. இந்தச் சூழலில் இவர்கள் வருகின்ற வாகனங்களை நிறுத்துவதற்கு எவ்வித வசதிகளும் கடந்த 10 ஆண்டுக்கால ஆட்சியில் செய்யப்படவில்லை. இதனால் இந்தப் பகுதியில் வியாபாரம் செய்திடும் வியாபாரிகள். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *கேள்வியைக் கேளுங்கள்.*

திரு. ஐட்ரீம் இரா. மூர்த்தி: *வாடிக்கையாளர்கள் சிரமத்தினை உணர்ந்து அங்கு ஒரு பன்னடுக்கு வாகன நிறுத்துமிடத்தை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

2022 ஏப்ரல் 11]

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிமெண்ட் ரோட்டில் இடமில்லாத காரணத்தினால், அருகில் இருக்கும் எம்.சி. ரோடு பகுதியை, தியாகராய நகர் பகுதியில் அகலமான நடைபாதை வசதி இருப்பதைப்போல, அகலமான பாதை வசதி உள்ள இடமாக உருவாக்க இருக்கிறோம். அந்தப் பகுதி,* Commercial area*–வியாபார ஸ்தலமாக இருக்கின்றது. பக்கத்திலே அண்ணா பார்க் பக்கத்தில் பன்னடுக்கு வாகனங்கள் நிறுத்தும் கட்டடம் கட்டுவதற்குரிய முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறது. அதைக்காட்டிலும், சிமெண்ட் ரோடு சாலையில் சாலையோர வாகன நிறுத்துமிட வசதி செய்து, வண்ணாரப்பேட்டை மெட்ரோ இரயில் நிலையத்தில் பிரத்யேகமாக வாகனங்கள் நிறுத்துமிடம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐட்ரீம் இரா. மூர்த்தி அவர்கள்.*

திரு. ஐட்ரீம் இரா. மூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பகுதிகள், கழகம் தோன்றிய இராபின்சன் பூங்கா ஆகியவற்றை ஒருங்கிணைத்து சிங்காரச் சென்னை 2.0 திட்டத்தின்கீழ் கடந்த ஜூலை மாதம் சென்னை மாநகராட்சி ஆணையரும், சிங்காரச் சென்னை திட்டத்தினுடைய தலைமை அலுவலக அதிகாரி உள்ளிட்ட அதிகாரிகளும் வந்து ஆய்வு செய்து, கிட்டத்தட்ட 24 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் இப்பணியைச் செய்வதற்காக ஓர் ஒப்புதலைத் தந்தார்கள். அதற்குப் பிறகு நவம்பர் மாதத்தில் பெய்த மழையின்போது மேலும் 4 கோடி ரூபாய் கூடுதலாகச் செலவு செய்ய வேண்டியதிருக்கின்றது என்ற அடிப்படையில், அந்தத் திட்டத்தை அப்பொழுது நிறைவேற்றுவதற்கு கடினமாக இருக்கிறது என்று சொன்னார்கள். எனவே, சிங்காரச் சென்னை 2.0 திட்டத்தில் இராபின்சன் பூங்காவையும், எம்.சி. ரோட்டையும் இணைத்து அங்கு ஒரு பன்னடுக்கு வாகன நிறுத்துமிடம் ஏற்படுத்தித் தந்தால் மிகவும் நன்றாக இருக்கும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே அதைத்தான் சொன்னேன். பார்க் பகுதியிலே பன்னடுக்கு வாகன நிறுத்துமிடம் கட்டுவதற்குரிய முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறது. அதற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு, அந்தப் பணி செயல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி.எம்.பி. எழிலரசன் அவர்கள்.

திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொன்மைவாய்ந்த காஞ்சிபுரம் நகரம் மிக அதிக அளவில் கோயில்கள் உள்ள நகரமாக இருக்கின்றது. மற்ற மாவட்டங்களிலிருந்தும், மாநிலங்களிலிருந்தும், பிற வெளிநாடுகளிலிருந்தும் பயணிகள் வந்து செல்லக்கூடிய ஒரு நகரமாக இருக்கக்கூடிய ஊர். தேரோடும் வீதி என்ற காரணத்தினால் சில இடங்களில் நெருக்கடிகள் இருக்கின்றன. கூடுதலாக, பட்டுப் புடவைக்கு மிகவும் பிரசித்தி பெற்ற ஊராகவும் இருப்பதனால், மிகப் பெரிய அளவில் வணிகத்திற்கு வந்து செல்லக்கூடியவர்கள் இருப்பதனால், அங்கு பன்னடுக்கு வாகன நிறுத்துமிடம் அமைத்துத் தர அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வளர்ச்சி பெற்ற அனைத்து நகரங்களிலும் இப்பொழுது வாகன நிறுத்துமிடம் என்பது மிகவும் அத்தியாவசியமான ஒன்றாக இருக்கிறது. எனவே, காஞ்சிபுரத்தைப் பொறுத்தளவில், அங்கு இடம் இருக்குமானால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கலந்து பேசி, அந்தப் பணியை விரைவிலே செய்து முடிப்பதற்கு இந்த அரசால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை சபாநாயகர் அவர்கள்.

2022 ஏப்ரல் 11]

மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி (பேரவைத் துணைத் தலைவர்): *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையில் அமைக்கப்படும் பன்னடுக்கு வாகனங்கள் நிறுத்தும் இடங்களுக்கான கட்டடங்கள் கட்டுவதற்கு அதிகம் செலவாகிறது. அப்பல்லோ மருத்துவமனை போன்ற பல பெரிய நிறுவனங்கள் வெறும் இரும்புகளைக்கொண்டு வாகனங்கள் நிறுத்துமிடங்களை அமைக்கிறார்கள்; செலவும் மிகக் குறைவாக இருக்கின்றது. அதைப்போல, திருவண்ணாமலை கோயிலுக்கு வருகின்ற பக்தர்கள் வசதிக்காகவும் மற்றும் எங்கெங்கு தேவை இருக்கிறதோ, அங்கே அதிக செலவில்லாத அந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே சென்னை தியாகராய நகர் பகுதியில், 222 கார்கள் மற்றும் 513 இருசக்கர வாகனங்கள் நிறுத்தும் வகையில் 2+6 என்ற அளவில் ஒரு கட்டடம் கட்டப்பட்டுள்ளது. மாண்புமிகு துணை சபாநாயகர் அவர்கள் கூறியதுபோன்று, சேலத்தில்* beam *வைத்து, முழுவதும் இரும்பினால் அமைக்கின்ற பணி நடைபெற்று வருகிறது. அதைப்போன்று, நான் முதலிலேயே கூறியதுபோன்று, திருவண்ணாமலை பகுதியிலும், எங்கு தேவையிருக்கிறதோ, அது எந்தப் பகுதியாக இருந்தாலும், வியாபார ஸ்தலங்களாக இருந்தாலும், அங்கு நகராட்சிக்குச் சொந்தமான இடம் இருந்தால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடன் கலந்து பேசி உடனடியாக அந்தப் பணியை தொடங்குவதற்குரிய முயற்சி மேற்கொள்ளப்படும். அவ்வாறு இடம் இல்லாதபட்சத்தில், இடத்தை முதலிலே கண்டறிந்து, பிறகு அந்தப் பணி தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 85, பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.*

வினா வரிசை எண் 86, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.